# பரமபத சோபானம்

வ்யாஜீக்ருத்ய விமுக்தி ஸௌத[3] பத[3]வீ ஸோபான ஸத்வர்ணநம்
ஶாரீரார்ணவ ரத்ன ஜாதமிஹய: ப்ராசீகஶத் ஸர்வஶ:.
தஸ்மின் திஷ்டதி வேங்கடேஶ்வர கவௌ ஶ்ரீபா[4]ஷ்யகாரோபமே
யம் கஞ்சித் புருஷம் ஹ்யுபாஸிது மயே மாகா[3] மன: ஸ்வஸ்தி தே..

தஸ்மை நமோஸ்து கு[3]ரவே தாத்[3]ருஶ விப[4]வாய வேங்கடேஶாய.
ப்ராவர்த யஜ்ஞநாநாம் பூ[4]மௌ பரமபத[3] ஹர்மய ஸோபாநம்..

## சிறப்புத்தனியன்

தேனேறு தாமரையாள் திருமார்பன் தன்
 திண்ணருளால் அவனடியில் விவேகம் பெற்றிங்கு*
ஊனேறு பவக்குழியை வெறுத்ததற்பின்
 ஊர் விரத்தியுடன் வினையின் திரளுக்கஞ்சி*
கூனேறு பிறை இறையோன் சாபம் தீர்த்தான்
 குரைகழலே சரணடைந்து குரம்பை விட்டு*
வானேறும் வழிப்படிகள் அடைவே கண்ட
 வண்புகழ்த் தூப்புல் வள்ளலருள் பெற்றேமே.

1:##
அடற்புள் அரசினும்* அந்தணர் மாட்டினும் * இன்னமுதக்
கடற்பள்ளி தன்னினும்* காவிரி உள்ளம் உகந்த பிரான் *
இடைப் பிள்ளையாகி உரைத்ததுரைக்கும்* எதிவரனர் *
மடைப்பள்ளி வந்த மணம்* எங்கள் வார்த்தையுள் மன்னியதே. (2)

2:
கள்ள மனத்துடன்* கண்டு முயன்ற கடுவினையால் *
நள்ளிருள் ஆழியில்* நற்சுவை ஐந்தென நாடியவோர் *
அள்ளலில் நாளும்* விழுந்தழியா வகை ஆரணநூல் *
வள்ளல் வழங்கிய* வான் படியான வழியிதுவே.

3:
அருவுருவாய் அவையனைத்தும் அறிவாரேனும் *
அருங்கலைகள் கற்றுரைக்க* வல்லாரேனும் *
தருமவழி அழியாமல்* காப்பாரேனும் *
தனிமறையின் தாத்பரியம் தருவாரேனும் *
இருவினையின் ஒழுக்கத்தால் ஏவல் ஓராது *
இங்கே நாம் சிறையிருந்த ஈனம் தீர்க்கும் *
திருமகளார் பிரியாத தேவன் திண்ணம் *
தேருதார் திண்படியில் ஏருதாரே.

4:
மறுத்தார் திருவுடன்* மார்பில் தரித்தவன் வாசகத்தை *
மறுத்தார் மயக்கமும்* மற்றதனுல் வந்த மாநரகும் *
நிறுத்தார் பவத்தில்* நெடு நாள் உழன்றமை கண்டதனுல் *
வெறுத்து ஆரண நெறியே* வெள்கியோட விரைவர்களே.

5:
வான்பட்ட மன்னிருளில் மயங்குமாறும் *
மறித்தொரு காலெனை ஊழி சென்றால் அன்றேர் *
ஊன்பட்ட உடலாழி வினை ஒழுக்கில் *
ஒருகரையுங் காணுதே யொழுகு மாறும் *
தேன்பட்ட விடம்போலத் தித்திக்கின்ற *
சிறுபயனே உறுபயன் என்றருந்துமாறும் *
நான்பட்ட படியின் நேர் தானே கண்டு *
தளர்ந்திடுமேல் வளர்ந்திடுமே தக்கவாறே.

6:
உலகத்துயர்ந்தவர்* ஒன்றும் பயனில் உறும் துயரும் *
அலகில்படாத* அப்போகம் கவர்ந்தெழும் அம்புயத்தோன் *
கலகத் தொழில் மதுகைடபரால்* படும் கட்டமெண்ணில் *
பலகற்ற மெய்யடியார்* படியார் இக்கடும் பவத்தே.

7:
தந்திரங்கள் அளவிலராய்த் தனத்தால் மிக்க *
தார் வேந்தர் தொழ வையமாண்டார் மாண்டார் *
சந்திரனும் சூரியனும் வீயுங்காலம் *
தாரகையின் வடமும் அற்றுத் தனி வானும் *
இந்திரனும் ஏறுயர்த்த ஈசன் தானும் *
ஈரிரண்டு முகத்தானும் இல்லாவந்நாள் *
நந்திருமால் நிலைகண்டார் நாகமெல்லாம் *
நரகென்று நற்பதமே நாடுவாரே.

8:
துறவறமே துணிவார்* துணுக்கற்ற விளந்துணிவோர் *
உறவிலர் ஆதலின்* நாம் உயர்ந்தாருடன் ஒன்றி நின்றேம் *
மறவழி மாற்றி* எம் மையலைத் தீர்த்தவர் மன்னருளால் *
கறவையுகந்த பிரான்* கழல் சூடும் கருத்தினமே.

9:
வந்தனபோல் வருவனவும் அனந்தமாகி *
மாளாத துயர்தரு வல்வினை நெருப்புக்கு *
இந்தனமாய் எண்ணிறந்த காலமெல்லாம் *
இன்னமும் இப்பவக்குழிக்கே இழியா வண்ணம் *
வெந்ததொரு குழவியை நற்குமரனுக்கும் *
வெறித் துளவ வித்தகனர் விதியே கொண்டார் *
பந்தனமாம் அவையனைத்தும் பாறுகைக்குப் *
பழ மறையின் பரம நெறி பயிலுவாரே.

10:
கருமாலையில் வரும்* கட்டங் கழிக்குங் கருத்துடையார் *
ஒருமால் பெருகும்* உயோகில் முயன்றும் அதன்றியும் நம் *
திருமாலடியிணை* திண் சரணுகுமென வரித்தும் *
தருமாலினியவை தானேயெனத்* தக வெண்ணுவரே.

11:
முன் செய்த வினைத்திரளின் முளைத்த தன்றி *
 முற்றுள்ள முதலரிந்து முளைத்த கூற்றில் *
தன்செய்ய திருவருளால் இசைவு பார்த்துத் *
 தழல்சேர்ந்த தூலமெனத் தானே தீர்த்துப் *
பின் செய்த வினையில் நினைவொன்றுது ஒன்றும் *
 பிழைபொருத்து வேறுளது விரகால் மாற்றும் *
என் செய்ய தாமரைக்கண் பெருமான் எண்ணம் *
 எண்ணுதர் எட்டிரண்டும் எண்ணுதாரே.

12:
உறையிட்ட வாளென* ஊனுள் உறையும் உயோகியரை *
நறை மட்டு ஒழிவற்ற* நல் துளவு ஏந்திய நாயகன்தன் *
இறை மட்டிலாத* நெடும்பயன் காட்ட நினைந்து* உடலச் –
சிறைவெட்டி விட்டு* வழிப்படுத்தும் வகை செய்திடுமே.

13:
முன் கருவி ஈரைந்தும் மனத்திற்கூட்டி *
முக்கியமா மருத்திலவை சேர்த்து அதெல்லாம் *
நன்குணரும் உயிரினில் சேர்த்து ஐம்பூதத்தை *
நண்ணுவித்துத் தான் தன்பால் வைக்கு நாதன் *
ஒன்பதுடன் வாசலிரண்டு உடைத்தாய் உள்ளே *
ஒரு கோடி துயர் விளைக்கும் உடம்பாய் ஒன்றும் *
வன் சிறையின் தலைவாசல் திறந்து நம்மை *
வானேற வழிப்படுத்த மனமுற்றுனே.

14:
தெருளார் பிரமபுரத் திறை சேர்ந்து* இடர் தீர்ந்தவர் தாம் *
மருளார் பிரமபுரச் சிறை தீர்ந்தபின் வந்தெதிர்கொண்டு *
அருளால் அமரர் நடத்த* இம்மாயயை கடந்த தற்பின் *
சுருளார் பவநரகச் சுழல்* ஆற்றின் சுழற்சியிலே.

15:
விழியல்லால் வேலில்லை விண்ணின் மாதர் *
மேனியல்லால் வில்லில்லை மீனவற்கு *
மொழியல்லால் அமுதில்லை என்று முன்னுள் *
முத்திவழி முனிந்தடைந்த மோகம் தீர்ந்தோம் *
கழியல்லால் கடலில்லை என்பார் போலக் *
காரியமே காரணமென்ற் உரைப்பார் காட்டும் *
வழியல்லா வழியெல்லம் கடந்தோம் * மற்றும்
வானேறும் வழிகண்டோம் மகிழ்ந்திட்டோமே.

16:
வன்பற்றுடன் மயல் பூண்டு* மற்ற்ரேர் கதியால் இனநாள் *
என்பற்றது பெறும் தானமும்* எத்தனை போதுளதாம் *
துன்பற்ற தந்துணிவால்* துயர் தீர்க்கும் துழாய் முடியான் *
இன்புற்ற நல்வழியால்* ஏற்று நற்பதம் எண்ணுவமே.

17:
பண்டை இருவினையாற்றில் படிந்து * பாரங்
காணுதே ஒழுகிய நாம் பாக்கியத்தால் *
வண்டமரு மலர் மாதர் மின்னுய் மன்ன *
வைசயந்தி மணிவில்லாய் விளங்க வான் சேர் *
கொண்டலருள் மழை பொழிய வந்த தொப்பாம் *
குளிர்ந்து தெளிந்த அமுதாய விரசை யாற்றைக் *
கண்டுஅணுகிக் கருத்தாலே கடந்து * மீளாக்
கரைகண்டோர் கதியெல்லாம் கதித்திட்டோமே.

18:
பூ வளருந் திருமாது புணர்ந்த* நம்புண்ணியனுர் *
தாவளமான தனித்திவம் சேர்ந்து* தமருடனே *
நாவளரும் பெரு நான்மறை* ஓதிய கீதமெல்லாம் *
பா வளருந் தமிழ்ப்* பல்லாண்டு இசையுடன் பாடுவமே.

19:
அடல் உரகம் உண்டுமிழ்ந்த அருக்கன் போல *
அழுக்கடைந்து கழுவிய நற்றரளம் போலக் *
கடலொழுகிக் கரைசேர்ந்த கலமே போலக் *
காட்டு தீக் கலந்தொழிந்த களிறேபோல *
மடல் கவரு மயல் கழிந்த மாந்தர்போல *
வஞ்சிறைபோய் மன்னர் பதம் பெற்றுரர்போல *
உடன் முதலா உயிர்மறைக்கும் மாயைநீங்கி *
உயர்ந்த பதமேறி உணர்ந்தொன்றினேமே.

20:##
மண்ணுலகில் மயல்தீர்ந்து மனந்ததும்பி *
மன்னுத பயனிகந்து மாலேயன்றிக் *
கண்ணிலது என்றஞ்சி அவன் கழலே பூண்டு *
கடுஞ்சிறை போய்க் கரையேறுங் கதியேசென்று *
விண்ணுலகில் வியப்பெல்லாம் விளங்கக் கண்டு *
விண்ணவர் தம் குழாங்களுடன் வேதம்பாடிப் *
பண்ணுலகில் படியாத இசையால் பாடும் *
பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே. (2)

21: ##
மாளாத வினையனைத்தும் மாளநாம் போய் *
வானேறி மலர்மகளார் அன்பு பூணும் *
தோளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு *
தொழுது உகந்து தோத்திரங்கள் பாடியாடிக் *
கேளாத பழமறையின் கீதங்கேட்டுக் *
கிடையாத பேரின்பம் பெருக * நாளும்
மீளாத பேரடிமைக்கன்பு பெற்றேரும் *
மேதினியில் இருக்கின்றேரும் விதியினுலே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: